# விவசாய தொழில்நுட்பத் தகவல்

**விவசாய தொழில்நுட்ப தகவல்களை விவசாயிகளிற்கு மிக விரைவாக வழங்கும் ஒரு கையேடு.**

**விவசாயத் திணைக்களத்தின் தேசிய விவசாய தகவல், தொடர்பாடல் நிலையத்தின் வெளியீடு.**

**தொழில்நுட்ப பிரசுரம் இலக்கம் 06 - 2021 ஜனவரி**





ஒரு தசாப்தத்திற்கும் மேலாக விவசாய விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்ட புதிய பயிர் வர்க்கங்களுக்கான அதிகாரப்பூர்வ ஒப்புதல் கூட்டம் கடந்த 20 ஆம் திகதி புதன் கிழமை கன்னொறுவை தாவர மரபணு வள நிலையத்தில் விவசாயப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி திரு.டபிள்யூ. எம். டபிள்யூ. வீரகோன் அவர்களின் தலைமையில் நடைப்பெற்றது. சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றி குறைந்த எண்ணிக்கையிலான மக்கள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் பல புதிய பயிர் வர்க்கங்கள் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டதோடு, அவை பற்றிய சுருக்கமான விளக்கமும் இங்கு வழங்கப்பட்டுள்ளது. பயிர் வர்க்கத்தை முன்னோடியாகக் கொண்ட விஞ்ஞானிகள் பற்றியும் இதன் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டு, நாற்றுக்கள் மற்றும் விதைகளின் கிடைப்புத் தன்மை பற்றிய சுருக்கமான குறிப்பும் உள்ளடங்கியுள்ளது. சிபாரிசு செய்யப்பட்ட பயிர்கள் தொடர்பான விரிவான மதிப்பீடுகள் எதிர்கால பிரசுரங்களில் தனித்தனியாக வெளியிடப்படும்.

**நெல் வர்க்கங்கள்:**


டபிள்யூ.எஸ்.பிரியந்த

1.பி.ஜி. 375 - இது அதிக விளைச்சலைத் தரும் சம்பா வர்க்கமாகும். இது 1999 இல் வெளியிடப்பட்ட பி.ஜி. 358 சம்பா வர்க்கத்திற்குப் பிறகு வெளியிடப்பட்ட சம்பா வர்க்கமாகும். குட்டையான இயல்பைக் கொண்டதால் 358 வர்க்கத்தின் பலவீனமான இயல்பான பயிர் சரிந்து விழுதல் இதன் மூலம் தவிர்க்கப்படுகின்றது. இது பத்தலகொட ஆராய்ச்சி நிறுவனத்தின் விவசாய விஞ்ஞானி டபிள்யூ.எஸ். பிரியந்த அவர்களின் முயற்சியின் விளைவாகும்.


சம்பா பியசிரி

2. பி.ஜி. 314 என்பது 95 - 100 நாட்களில் விளைச்சலைத் தரும் ஒரு வெள்ளை நாடு வர்க்கமாகும். பிலிப்பைன்ஸில் உள்ள சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவனம் வழங்கிய வர்க்கங்களின் தொகுப்பை ஆராய்ந்ததன் விளைவாக மானாவரியாக செய்கைப் பண்ணும் மேட்டு நில வயல்களுக்கான நீண்ட கால தேவைக்கான தீர்வாக வறட்சியைத் தாங்கி வளரும் வர்க்கமாக உற்பத்தி செய்து தேர்ந்தெடுக்கப்பட்டது. இதனுடன் சம்பந்தப்பட்ட விவசாய விஞ்ஞானி பத்தலகொட ஆராய்ச்சி நிறுவனத்தின் சம்பா பியசிரி அவர்கள் ஆவார்.


ஹர்ஷனி சிரிவர்தன

3. ஏ.டீ. 313 என்பது சிவப்பு நிற நீளமான விதைகளைக் கொண்ட நறுமணமுள்ள உயர்தர அரிசி வர்க்கமாகும். மூன்று மாதங்களில் விளைச்சலைத் தருவதாலும், நோய், பீடைகளுக்கு ஓரளவான எதிர்ப்புத் தன்மைக் கொண்டதாலும் அம்பலந்தொட்ட ஆராய்ச்சி நிறுவனத்தின் விவசாய விஞ்ஞானி ஹர்ஷனி சிறிவர்தனகே அவர்கள் இவ் வர்க்கத்தை "காலநிலைக்கு நட்பானது" என அறிமுகப்படுத்தியுள்ளார்.

இந்த நெல் வர்க்கங்களின் விதை பெருக்கம் ஏற்கனவே திணைக்களத்தால் நடைபெற்று வருகின்றது. மேலும் எதிர்வரும் போகத்தில் விவசாயிகளுக்கு விதை நெல்லை வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

**கடுகுடா:**


ஐ.கழுபோவில

கம்பஹா மாவட்டத்தில் வளரும் மரங்களிடையே காணப்படும் கவர்ச்சிகரமான பெரிய காய்களைக் கொண்ட இனிப்புச் சுவையுடைய "ஹொரண கடுகுடா 1 மற்றும் 2" ஆகிய இரு கடுகுடா வர்க்கங்களை ஹொரண பழ ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ளது. இதன் ஒட்டுக் கன்றை வீட்டுத் தோட்டத்தில் நடுகை செய்து, எளிதில் கையாளக்கூடிய அளவில் சிறிய, சுவையான கடுகுடா தாவரத்தைப் பராமரிக்க யார் விரும்ப மாட்டார்கள்? விவசாய விஞ்ஞானி ஐ. கலுபோவில அவர்களை (0718257385) அழைப்பதன் மூலம் ஹொரண அல்லது பண்டராகம பண்ணைகளில் தற்போதுள்ள ஒட்டுக் கன்றுகளின் தொகுப்பில் ஒன்றை முன்பதிவு செய்ய முடியும்!

**எலுமிச்சை:**

வருடம் பூராகவும் காய்களை உருவாக்கும் பெரிய காய்களைக் கொண்ட எலுமிச்சையாக "ஹொரண லயிம் 01" எனும் வர்க்கம் ஹொரண ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைமை இனப்பெருக்க விஞ்ஞானி டபிள்யூ.டீ. லெஸ்லி அவர்களினால் வெளியிடப்பட்டுள்ளது. ஆண்டு முழுவதும் பெரிய பழங்கள் கிடைப்பதால் விளைச்சலும் அதிகம். பழங்களில் சாற்றின் உள்ளடக்கமும் அதிகமாகும். ஒட்டுக் கன்றுகளை ஹொரண ஆராய்ச்சி நிறுவனத்தில் பெற்றுக் கொள்ள திரு லெஸ்லி அவர்களை (0715657016) அழைக்கலாம்.


டப்ளியூ.டீ.லெஸ்லி

**வில்வம்:**

சராசரியாக 250 - 500 கிராம் எடைக்கு இடைப்பட்ட ஒரு மதிப்புமிக்க வில்வம் வர்க்கம் "ஹொரண பெலி 01" டபிள்யூ.டீ. லெஸ்லியின் பொறுப்புடன் வெளியிடப்பட்டது. வில்வம் பழத்தின் நடுப் பகுதியில் உள்ள கடினமான இழையம் குறைந்த, கசப்பு சுவைக்குக் காரணமான சிறிய விதைகளும் குறைந்த இப் பழங்களில் நார் குறைவாக இருப்பதோடு, அதிக இனிப்பாகவும் காணப்படும். சதை ஒரு கவர்ச்சியான செம்மஞ்சள் நிறத்தில் காணப்படுவதோடு, ஒட்டுக் கன்றுகளை ஹொரண ஆராய்ச்சி நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

**மா:**

கன்னொறுவை அம்ப – 01 எனும் சிபாரிசு செய்யப்பட்ட இவ் வர்க்கம் ஈர வலயத்திற்காக சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. பழத்தின் சராசரி எடை சுமார் 650 கிராம் ஆகும். பழுக்கும்போது "பெரி" அல்லாத சதையினால் ஆக்கப்பட்டுள்ளமை கவர்ச்சிகரமான இயல்பாகும் என்பதை இவ் வர்க்கத்தை வெளியிட்ட கலாநிதி ஷிரோமணி எதிரிமான்ன அவர்கள் தெரிவிக்கின்றார். தற்போது ஒட்டுக் கன்றுகளின் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், மேலும் 6 மாதங்களில் கன்னொறுவை பண்ணையினூடாக கன்றுகள் வெளியிடப்படும்.

**ஈரப்பலா:**


கலாநிதி ஷிரோமனி

ஹொரானா தெல் - 01 மற்றும் 02 எனும் இரண்டு புதிய ஈரப்பலா வர்க்கங்கள் சிபாரிசு செய்யப்பட்டன. இவை 2015 ஆம் ஆண்டில் பசுபிக் தீவுகளிலிருந்து கொண்டு வரப்பட்டு இங்கு உரிய முறையில் பரிசோதிக்கப்பட்ட வர்க்கங்களாகும். முதலாம் வர்க்கம் ஆண்டுக்கு இரண்டு முறை பழங்களைத் தரும், சற்று மஞ்சள் நிற, வட்டமான காய்களாகும். அவை 600 கிராம் எடையுள்ள காய்களாக இருக்கும். இரண்டாவது வர்க்கம் சற்று பெரிய, நீள்வட்ட காய்களைக் கொண்டுள்ளது. மாத் தன்மை அதிகமாக காணப்படுவதோடு ஒரு காய் ஒரு கிலோ கிராமை நெருங்கும் அளவுடையது. கலாநிதி ஷிரோமணி எதிரிமான்ன அவர்களினால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

**சின்ன வெங்காயம்:**


எரந்தி நயனா

அங்குனுகொலபெலெஸ்ஸ ஆராய்ச்சி நிறுவனத்தின் விவசாய விஞ்ஞானியான எரந்தி நயனா அவர்களினால் ஏ.என்.கே.ஜீ.சி.எல்.ஓ. 01 எனும் பெரிய குமிழ்களையுடைய, அதிக விளைச்சலைத் தருகின்ற ஒரு சின்ன வெங்காய வர்க்கம் வெளியிடப்பட்டுள்ளது. ஒரு பயிருக்கான பெரிய அளவிலான நடுகைப் பொருட்களின் உற்பத்தி வழக்கமாக உத்தியோகபூர்வ சிபாரிசு ஒப்புதலுக்குப் பிறகு ஆரம்பிப்பதால் தற்போது வீட்டுத் தோட்ட மட்டத்தில் பரிசோதிக்கக்கூடிய சிறிய எண்ணிக்கையிலான குமிழ்களை மட்டுமே வழங்க முடியும் என திருமதி நயனா (0718462231) கூறுகின்றார்.

**நிலக்கடலை:**


கலாநிதி ஜீவனி

அங்குனுகொலபெலெஸ்ஸ ஆராய்ச்சி நிறுவனத்தின் கலாநிதி ஜீவனி திதுகொட அவர்கள் சமீபத்தில் இரண்டு உள்ளூர் ஜம்போ நிலக்கடலை வர்க்கங்களை வெளியிட்டார். இதற்கு ஒரு படி மேலே சென்று, இந்த முறை அவர் ஏ.என்.கே.ஜி.என். – 04 என்ற சிறிய விதைகளைக் கொண்ட வர்க்கத்தை அறிமுகப்படுத்தி வெளியிட்டார். அதனால் விவசாயிகளின் வசதிக்காக "டைனி" என்ற பெயரை அவர் பரிந்துரைக்கின்றார். சிறிய விதைகளைக் கொண்ட வர்க்கத்தை சொக்லேட்டுகளில் உள்ளடக்குவதற்கு

கைத்தொழிலாளர்களின் தொடர்ச்சியான கோரிக்கையை எதிர்கொண்டு கலாநிதி ஜீவனி இந்த தெரிவை வெற்றிகரமாக முடித்துள்ளார். கன்றுகளைப் பெருக்க விரும்பும் அனைவரும் கலாநிதி ஜீவனியை (0714454114) அழைத்து சிறியளவிலான விதை மாதிரியைப் பெற்றுக் கொள்ளலாம்.

**உழுந்து:**


பிரியந்தி குமாரரத்ன

தற்போது இறக்குமதியும் நிறுத்தப்பட்டுள்ளதால் இரண்டு புதிய உழுந்து வர்க்கங்களின் வெளியீடு ஒரு முக்கியமான நிகழ்வாகும். மஹாஇலுப்பள்ளம ஆராய்ச்சி நிறுவனத்தின் விவசாய விஞ்ஞானி பிரியந்தி குமாரரத்ன அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட எம்.ஐ.பி.ஜி. - 03 எனும் வர்க்கம் அதிக விளைச்சலைத் தரக்கூடிய வர்க்கமாகும். மேலும் எம்.ஐ.பி.ஜி. – 04 எனும் குறுகிய கால, வைரஸை எதிர்க்கும் வர்க்கமாகும். இனப்பெருக்கம் செய்ய ஒரு சிறியளவிலான விதை மாதிரியை வழங்கவும் அவர் தயாராக உள்ளார் (0716644632).

**எள்ளு:**


இஷாரா பெரேரா

கருப்பு நிற விதைகளைக் கொண்ட எள்ளு வர்க்கமாகும். அங்குனுகொலபெலெஸ்ஸ ஆராய்ச்சி நிறுவனத்தில் இந்த கண்டுபிடிப்பை முன்னெடுத்த விவசாய விஞ்ஞானி இஷாரா பெரேராவின் கூற்றுப்படி, விளைச்சல் அதிகமாகும். எண்ணெயின் சதவீதமும் அதிகமாகும். ஏ.என்.கே.எஸ்.ஈ. – 04 எனும் சிறியளவிலான விதைகளைக் கொண்ட மாதிரியொன்றைப் பெற்றுக் கொண்டு (0706000750) கன்றுகளைப் பெருக்கும் ஆற்றல் செய்கையாளர்களிடம் உண்டு. எதிர் வரும் சிறு போகத்தில் செய்கைப் பண்ணுவதற்காக பெரியயளவில் விதைகள் தேவைப்பட்டால், உதவி விவசாயப் பணிப்பாளர் திரு விஜிதவர்ண அவர்களைத் (0715343086) தொடர்பு கொள்ளவும்.

**பூசணி:**


கலாநிதி கன்னங்கர

இது திணைக்களத்தால் வெளியிடப்பட்ட முதல் பூசணி வர்க்கமாகும். எம்.கே. பூசணி - 01 எனப் பெயரிடப்பட்ட இது உருளை வடிவத்தில் இருப்பதுடன் அதிக சதையைக் கொண்டது. எனவே இது கைத்தொழிலின் போது குறைவாகவே வீணாகின்றது என அதை வழங்கிய விவசாய விஞ்ஞானி கலாநிதி கமல் கன்னங்கர அவர்கள் கூறினார். தேவைக்கு அமைய விதை மாதிரியைப் பெற்றுக் கொள்ளலாம். (0774072432)

**பிரதியாக்கம்** :- சனத் எம். பண்டார, உதவி விவசாயப் பணிப்பாளர், தேசிய விவசாயத் தகவல், தொடர்பாடல் நிலையம், கன்னொறுவை

**தமிழாக்கமும், கணனி வடிவமைப்பும்:-** லிசோதா செல்வராஜ், தேசிய விவசாயத் தகவல், தொடர்பாடல் நிலையம், கன்னொறுவை

மேற்பார்வை மற்றும் ஆலோசனை : டப்ளிவ்.எல். ஹிரான் பீரிஸ் (பணிப்பாளர்- தகவல். தொடர்பாடல்)
ஐ.எஸ்.எம். ஹலீம்தீன் (உதவி விவசாயப் பணிப்பாளர்)